NEW PARRAMATTA RD

# 'பரமட்டா சாலையோர நகர்ப்புறப் பகுதி உருமாற்றத் திட்டம்' இப்போது இறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

**பரமட்டா சாலையோரப் பகுதியிலுள்ள நகரவைகள் மற்றும் சமூகத்தினருடன் கலந்துரையாடி அவர்களோடு மூன்று வருட காலமாக இணைவாய்ப் பணியாற்றியதற்குப் பிறகு, வளர்ச்சி, மாற்றம் மற்றும் முதலீடு ஆகியவற்றிற்கு வழிகாட்டும் 'திட்டம்' (Strategy) ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம்.**



*'க்ரன்வில் வட்டார'த்திற்கான கலைஞரது கண்ணோட்டம். இது ஒரு எதிர்பார்ப்பு மட்டுமே. மாற்றங்கள் ஏற்படக்கூடும்.*

## பரமட்டா சாலையோரப் பகுதிகளுக்கான 'திட்டம்' ஒன்று ஏன் நமக்குத் தேவைப்படுகிறது?

பரவலான இரண்டு தேவைகளை 'பரமட்டா சாலையோர நகர்ப்புறப் பகுதி உருமாற்றத் திட்டம்'கருத்தில் கொள்கிறது: சிட்னி நகரின் வளர்ச்சிக்கு ஏது செய்ய, மற்றும் மக்கள் வசிப்பதற்கும்,வேலை செய்வதற்கும், பயணம் செய்வதற்கும் ஏற்ற இடமாக இந்த சாலையோரப் பகுதிகளை மாற்றியமைக்க.

எதிர்காலத்திற்காகத் திட்டமிட வேண்டிய தேவையில் சிட்னி இருக்கிறது. சிட்னி நகரின் வளர்ச்சிக்கு உதவுவதில் பரமட்டா சாலையோரப் பகுதிகள் நேர்முகமானதொரு பங்கினை ஆற்றும், மற்றும் இது சிட்னி பெரு நகரின் இரு பிரதான CBD-க்களை - அதாவது கிழக்கில் சிட்னியையும் மேற்கில் பரமட்டா-வையும் இணைக்கும் மைய முதுகெலும்பாக உள்ளது. தொழில்சார்ந்த, வர்த்தகம்சார்ந்த மற்றும் தனிப்பட்ட போக்குவரத்துகளுக்கு இந்த சாலைப் பகுதிகள் அத்தியாவசியமானவை மற்றும் உயிரோட்டமுள்ள பல சமூகங்களுக்கு இல்லமாகவும் இவை அமைகின்றன.

அதியளவிலான போக்குவரத்து மற்றும் நெரிசல்கள், வசதிகள் குறைபாடு, அதியளவிலான காலியிடங்கள், சில பகுதிகளில் ஒருங்கிணைப்பற்ற அல்லது செயலூக்கமற்ற திட்டக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றைச் சமாளிக்க இயலாத நிலையில் பரமட்டா சாலைப் பகுதிகள் இருந்துவருகின்றன.

## இந்தத் 'திட்டம்' ஆற்றும் காரியங்கள் யாவை?

அடுத்த 30 ஆண்டுகளில் இந்த சாலைப் பகுதிகளில் 27,000 புதிய வீடுகள் மற்றும் பலவிதப்பட்ட தொழில்களில் 50,000 புதிய வேலைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்திலான நோக்கு மற்றும் நிலப் பயன்பாடு மற்றும் போக்குவரத்துக் கொள்கைகளை இந்தத் 'திட்டம்' கோடிட்டுக் காண்பிக்கிறது.

கட்டுமானப் பணி நிறைவேற்றம் மற்றும் நிதியுதவி ஆகியவற்றோடு ஒருங்கிணைக்கப்படும் விதத்தில் படிபடியாகச் செய்யப்படும் எதிர்கால நிலப் பயன்பாட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஒருங்கிணைவான நிலப் பயன்பாட்டுத் திட்டம் மற்றும் போக்குவரத்து முறைமையினை இது அளிக்கிறது. வீடுகள், வேலைகள், போக்குவரத்து, திறந்தவெளிகள் மற்றும் பொது வசதிகள் ஆகியவற்றின் மூலமாக பரமட்டா சாலைப் பகுதிகளில் வசிக்கும் சமூகத்தினருக்கு இந்தப் புதிய அபிவிருத்தி புத்துயிரூட்டும்.

## 'பரமட்டா சாலையோர நகர்ப்புறப் பகுதி உருமாற்றத் திட்டம்' பின் வருவனவற்றைக் குறிக்கும்:

### பன்முகத்தன்மை
- வீட்டுவசதி மற்றும் வேலை வாய்ப்புகளில்

### கலவைப் பயன்பாட்டு வட்டாரங்கள் (Mixed use precincts)
- பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் சமூக வசதிகளுக்கு அருகாமையிலுள்ள வீட்டுவசதிகள், வேலைகள் மற்றும் கடைகள்

### இன்னும் வசதியான பொதுப் போக்குவரத்து -
- பரமட்டா சாலையில்
- மேம்படுத்தப்பட்ட நடைபாதை ம்ற்றும் மிதிவண்டிப் பாதை இணைப்புகள்

### பாரம்பரியம் மற்றும் வசதிகளுக்கான மதிப்பு
- புதிய கட்டடங்களின் உருவளவு மற்றும் வகைகளின் மூலம் ஏற்படும் மாற்றங்கள்

### மக்களுக்கேற்ற அதிசிறந்த இடங்கள் -
- வசிக்க, வேலை செய்ய மற்றும் சென்று பார்க்க
- இன்னும் வலுவாய் நீடித்து நிலைக்கக்கூடிய சமூகங்கள்

### பசுமையான இடங்கள்
- நிலவடிவு செய்யப்பட்ட பகுதிகள்
- பூங்காக்கள் மற்றும் திறந்தவெளிகள்
- நகர்ப்புறப் பேரங்காடிகள்

## அடுத்து என்ன?

வளர்ச்சியை ஊக்குவித்து, வசிக்கவும், வேலை செய்யவும், சனங்கள் வந்து பார்க்கவும் ஏற்ற அதிசிறந்த இடமாக பரமட்டா சாலையோரப் பகுதிகளை மாற்றியமைப்பதற்கான நி.ச.வே. அரசாங்கத்தின் 30 ஆண்டுத் 'திட்ட'மாகும் இது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பொதுமக்களது கருத்துரைப்பிற்காக, இத் 'திட்ட'த்தின் மூன்று 'வடிவுருக்கள்' (draft versions) காட்சிப்படுத்தப்பட்டன. மிகச் சமீபத்திய வடிவுருவிற்கு 3,700-க்கும் மேற்பட்ட மறுமொழிகள் கிடைத்தன. இவற்றிலிருந்து இந்தத் 'திட்ட'த்தின் இறுதி வடிவுருவிற்கான யோசனைகள் பெறப்பட்டன.

இந்த சாலையோரப் பகுதிகளின் உருமாற்றம் இனி துவங்கலாம். இதுவரை நடந்து முடிந்துள்ள செயல்பாடுகள் என்ன மற்றும் இனி நடக்கவிருப்பது என்ன என்பதைக் கீழ்வரும் காலக்கோடு காண்பிக்கிறது.

| | |
|---|---|
| 2014 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதி | 'திட்ட'த்தின் முதல்நிலை வரைவு குறித்த சமூகக் கலந்துரையாடல்கள் |
| பிப்ரவரி 2015 - மத்திய செப்டம்பர் 2015 | மாநில முகமைகள் மற்றும் உள்ளூர் நகரவைகளுடன் இணைவாய் 'திட்ட வரைவு' (Draft Strategy) உருவாக்கப்பட்டது |
| மத்திய செப்டம்பர் 2015 - டிசம்பர் 2015 | 'திட்ட வரைவு' பொதுப் பார்வைக்கு வைக்கப்பட்டது |
| சனவரி 2016 - செப்டம்பர் 2016 | கருத்துரைப்புகள் கவனத்தில் கொள்ளப்படன, 'கலந்துரையாடல் பலன்கள் அறிக்கை', (மே மாதம் 2016), 'திட்ட வரைவு' மீள்பார்வையிடப்பட்டது |
| நாம் இப்போது இங்கு இருக்கிறோம். நவம்பர் 2016 | 'திட்டம்' அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வெளியிடப்படுகிறது |
| நவம்பர் 2016 - அக்டோபர் 2017 | சட்டப்படியான திட்டமிடல் துவங்கும் 'நகர்ப்புற வசதி மேம்பாடு' செயல்திட்டங்களுக்கான திட்டமிடல் துவங்கும் |
| 2016 - ஆம் ஆண்டின் இறுதி | 'சிட்னி பெருநகர ஆணைய' (Greater Sydney Commission) த்தினால் 'மாவட்டத் திட்டங்கள்' காட்சிப்படுத்தப்படும். |
| 2017 - இல் இருந்து | சட்டப்படியான திட்டமிடல் தொடரும். 'நகர்ப்புற வசதி மேம்பாடு' பணிகள் துவங்கும் |
| 2018 - இல் இருந்து | அபிவிருத்தி மதிப்பீடுகள் மற்றும் கட்டுமானங்கள் |

இந்தத் 'திட்ட'மானது நிலங்களை மண்டலமாற்றம் (rezone) செய்யாது, ஆனாலும் எதிர்கால மண்டலமாற்ற விண்ணப்பங்களைக் கருத்தில் கொள்வதற்கு வழி காட்டும்.

இந்தத் 'திட்ட'த்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் அனைத்து மட்டங்களுக்கும் பங்கு இருக்கும். தற்போது நடப்பிலுள்ள சட்டப்படியான திட்டமிடல் முறைமைகளைப் பாவித்து 'மண்டலமாற்றியமைப்புகள்' (rezonings) எதுவும் கருத்தில் கொள்ளப்படும். 'உள்ளூர்ப்பகுதி சுற்றுசூழல் திட்ட'(LEP) த்தில் செய்யப்படும் மாற்றங்கள் மற்றும் நகரவைகளால், அல்லது நில உரிமையாளர்கள் அல்லது கட்டட அபிவிருத்தியாளர்களால், அல்லது 'திட்டமிடல் மற்றும் சுற்றுசூழல் திணைக்கள'(DPE) த்தின் 'முந்துரிமை வட்டாரத் திட்ட'(Priority Precincts program)த்தினூடாக மேற்கொள்ளப்படும் விரிவான மீளாய்வுகளின் வாயிலாக இது செய்யப்படக்கூடும்.

இந்தத் 'திட்ட'த்திற்கும், இதன் 'அமலாக்க முறைமைக'ளுக்கும் (சட்டரீதியான) அதிகாரத்தை அமைச்சகக் கட்டளை ஒன்று அளிக்கிறது, மற்றும் நிலப் பயன்பாடு மற்றும் போக்குவரத்து குறித்த முன்மொழிவுகள் ஆகியன இந்தத் திட்ட'த்திற்கு அமைய இருக்கவேண்டும் என்று வேண்டுகிறது. தெளிவான, பொருத்தமான முறையில் திட்டமிடல் குறித்த முன்மொழிவுகளைக் கருத்தில் கொள்ள நகரவைகளுக்கு இது ஏது செய்கிறது.

இந்த சாலையோரப் பகுதிகள் அமைந்திருக்கும் மத்திய மற்றும் மத்திய மேற்கு மாவட்டங்களுக்கான திட்ட வரைவுகளுக்கும் இது உரு கொடுக்கும். உருவாக்கத்திற்குப் பிறகு, தகுந்த LEPs அல்லது DPE -யின் முந்துரிமை வட்டாரத் திட்டத்தின் வாயிலாக 'மாவட்டத் திட்டங்கள் அமல்படுத்தப்படும்.

இந்தத் 'திட்ட' அமலாக்கத்தில் உதவுவதற்கு 'அமலாக்கத் திட்டம் 2016 – 2023' எனும் திட்டம் குறுகியகால அபிவிருத்தி நிலைகளைக் கோடிட்டுக் காண்பிக்கிறது, மண்டலமாற்றியமைப்பிற்கு ஏற்ற முதல் நிலங்களைக் காண்பிக்கிறது மற்றும் மண்டல-மாற்றியமைப்பிற்குத் தேவைப்படும் கட்டுமான வசதிகளை அடையாளம் காண்பிக்கிறது.

## எதிர்காலக் கலந்துரையாடல்கள்

இந்தத் 'திட்ட' அமலாக்கத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஈடுபாடுகள் உள்ளடங்கும். எதிர்கால மண்டலமாற்றியமைப்புகளுக்கான முன்மொழிவுகள் குறித்த பொதுக் காட்சியரங்குச் செயல்பாடுகளின் வாயிலாக சமூகத்தினரும், இதில் சம்பந்தப்படும் பங்குதாரர்களும் இந்த சாலையோரப் பகுதிப் புத்துருவாக்கத்தில் தொடர்ந்து தீவிர ஈடுபாடு கொள்ளலாம்.

## மேலதிகமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமா?

இந்தத் 'திட்டம்' என்ன என்றும், கருத்துரைப்புகள் இத் 'திட்ட'த்திற்கு எவ்வாறு பயன்பட்டன என்றும் பார்க்கவும், 'அமலாக்க முறைமைகள்' மற்றும் 'தகவல் ஏடுகளைக் காணவும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## 'பரமட்டா சாலையோர நகர்ப்புறப் பகுதி உருமாற்றத் திட்டம்'

மேற்கில் 'க்ரன்வில்'லில் இருந்து கிழக்கில் 'கேம்பர்டௌன்' வரைக்குமான 20 கி.மீ. நீளமுள்ள பரமட்டா சாலையோரப் பகுதியில் வளர்ச்சியையும், படிப்படியாகக் கட்டுமானங்களையும் ஏற்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நிலப் பயன்பாட்டுத் திட்டம் மற்றும் போக்குவரத்துத் திட்டமாகும் இது.


அதியளவுத் திறந்தவெளிகள், இன்னும் அழகான தெருக்கள்.குறைவான போக்குவரத்து நெரிசல், மேம்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து மற்றும் குடிமக்களுக்கும் வர்த்தகங்களுக்கும் சிறந்த சுற்றுச்சூழல்கள் ஆகியவற்றிற்கு இத் 'திட்ட'மும், 'அமலாக்க முறைமைக' (Implementation Tool Kit) ளும் முந்துரிமை அளிக்கின்றன.

2013 ஆம் ஆண்டிலிருந்து, மா நில மற்றும் உள்ளூர் அரசுகளுக்கிடையேயான பெரும் ஒத்துழைப்பின் விளைவே இந்தத் 'திட்ட'மும் 'அமலாக்க முறைமைக'ளுமாகும். மேலும் இதனோடு சம்பந்தப்பட்டுள்ள அனைவரோடும் மேற்கொள்ளப்பட்ட விரிவான கலந்துரையாடல்களிலிருந்தும், ஆய்வுகளிலிருந்தும் யோசனைகள் பெறப்பட்டுள்ளன.

இந்த சாலையோரப் பகுதிகளிலுள்ள எட்டு வட்டாரங்களின் வளர்ச்சி மற்றும் புதுப்பிப்பின் மீது கவனக்குவிவு அமையும். இங்குள்ள போக்குவரத்து அணுகு வசதி, திறந்த வெளிகள் மற்றும் உள்கட்டுமானங்கள் மற்றும் மேலதிகமான வீட்டுவசதிகள் மற்றும் வேலை உருவாக்கத் திறன் ஆகியவற்றின் காரணமாக இந்த வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த சாலையோரப் பகுதிகளின் தன்மை மற்றும் பாரம்பரியத்தைக் கருத்தில் கொள்ளும் விதத்தில் உருவாக்கப்படும் வீட்டுவசதிகள், வேலைகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் இங்குள்ள ஒவ்வொரு வட்டாரமும் திட்டமிடப்படும்.

இந்த வட்டாரங்களாவன:




இந்த சாலையோரப் பகுதிகளின் மாற்றத்திற்குப் பங்களிப்பு செய்யும் கட்டமைப்புப் பகுதிக( Frame Areas)ளுடன் இவை இணைக்கப்படும்.

**மேலதிகத் தகவலுக்கு, www.urbangrowth.nsw.gov.au/projects/parramatta-road எனும் வலைத்தளத்தில் 'திட்ட'(Strategy)த்தினைப் பாருங்கள்.**

*இந்த ஆவணம் அச்சிடப்படும்போது, இந்த ஆவணம் சரியானதாக இருந்தது என்பதை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆவணத்திலுள்ள விடயங்களின் துல்லியத்தன்மை அல்லது முழுமை குறித்து உத்திரவாதங்கள் எதையும் UrbanGrowth NSW (இதன் முகவர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட) அளிக்கவில்லை. இந்தத் தாள்களில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்துமே அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலிப்பவையோ அல்லது தீவிரமாகக் கருத்தில் கொள்ளப்படுபவையோ அல்ல. இந்த ஆவணத்தின் ஒரு பகுதியின் காரணமாக, அல்லது இந்த முழு ஆவணத்தின் காரணமாக செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்காக உறுதிமொழியளிக்கப்பட்ட எதன் தொடர்பாகவும் எவரொருவருக்கும் எவ்வொரு கடப்பாட்டையும் அல்லது அனைத்துக் கடப்பாடுகளையும் UrbanGrowth NSW துறக்கிறது.*

1300 730 627 info@newparramattard.com.au urbangrowth.nsw.gov.au

Interpreter **131 450 உங்கள் மொழியில் பேசலாமே** மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், 'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' யினை அழையுங்கள்

urbangrowth.nsw.gov.au

Tamil

NSW GOVERNMENT UrbanGrowth NSW

# 'நிலப் பயன்பாடு மற்றும் போக்குவரத்து ஒருங்கிணைப்புத் திட்டம்'

அடுத்த 30 ஆண்டுகளில் **27,000 வீடுகளில் வாழும் 56,000 புது சனங்களுடைய இல்லமாக** இந்த சாலையோரப்பகுதி இருக்கும். **50,000 புது வேலைகளும்** இங்கு உருவாக்கப்பட்டிருக்கும்.

- 31 பில்லியன் டாலர் மதிப்புள்ள கட்டுமானங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன
- பன்முகத் தன்மை கொண்ட வளைந்துகொடுக்கும் பொருளாதாரம், புதிய வீடுகள், கடைகள், சேவைகள் மற்றும் பொழுதுபோக்குகளை இந்த எட்டு வட்டாரங்கள் அளிக்கும்.
- இச் சாலையோரப் பகுதிகளில் அதி சிறந்த பொதுப் போக்குவரத்து மற்றும் நடைபாதை மற்றும் மிதிவண்டிப்பாதை இணைப்புகள்
- இன்னும் அதியளவிலான மரங்கள் மற்றும் நிலவடிவமைப்புகள், பூங்காக்கள் மற்றும் திறந்த வெளிகள் ஆகியன இச் சாலையோரப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.
- எதிர்கால அயல்புறங்களுக்கு ஆதரவுதவியளிப்பதற்கான கூடுதல் சமூக வசதிகள்
- தரமான வடிவமைப்புகளோடு அமையும் கட்டடங்கள் மற்றும் திறந்த வெளிகள்
- பாரம்பரியத்திற்கான மதிப்பு
- மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தண்ணீர் மற்றும் ஆற்றல் பயன்பாடு

